மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு A-TS Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளி
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 21 வியாழக்கிழமை (03 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 68

## மக்கள் நேரடியாகத் தெரிவு செய்வது ரத்தாகும்

# ஜனாதிபதியை நாடாளுமன்றமே தேர்ந்தெடுக்கும் புதிய நடைமுறை!

## தமிழ்க் கைதிகள், அதிகாரி பலாலியில் சுட்டுக் கொலை

கொழும்பு, பெப். 3

பலாலி இராணுவ முகாமில் படையினரால் கைது செய்யப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் சிலரும் —

அங்கு தொலைத்தொடர்பு அதிகாரியாகக் கடமையாற்றிய தமிழர் ஒருவரும் இராணுவத்தினரால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என கொழும்பில் வெளியாகும் தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பூநகரி முகாமின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் பலாலி இராணுவ முகாமுக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே மோதல் இடம் பெற்றது என்றும் —

அந்த மோதலில் படையினர் சிலர் கொல்லப்பட்டதை அடுத்து, ஆத்திரமுற்ற இராணுவத்தினர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் சிலரையும், தொலைத் தொடர்பு அதிகாரியான தமிழரையும் சுட்டுக் கொன்றனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட தொலைத் தொடர்பு அதிகாரியான தமிழர் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இருதயநாதன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## ராணுவத்தில் புதிதாக மேலும் 3 டிவிஷன்கள்

யாழ்ப்பாணம், பெப். 3

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கென புதிய இராணுவப் பிரிவுகள் [டிவிஷன்கள்] அமைக்கப்படவுள்ளன.

வடக்கு – கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் யுத்த நடவடிக்கைகளை ஒட்டி ஸ்ரீலங்கா இராணுவத்தில் செய்யப்படும் மறுசீரமைப்புக்களின் கீழ் புதிய கட்டளைப் பிரிவுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி, "சண்டே ரைம்ஸ்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இராணுவத்தில் தற்போது மூன்று டிவிஷன்கள் உள்ளன.

முதலாவது டிவிஷனில் சப்பிரகமுவா, ஊவா, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்கள் உள்ளன.

இரண்டாவது டிவிஷனில் மத்திய, வடமேற்கு, வடமத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆயர் கெனத் குழுவினர் கிளிநொச்சிக்கு வந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 3

அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ தமது வடபகுதி விஜயத்தின் முதற்கட்டமாக நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தார்.

அவருடன் அவரது மனைவி சித்திரா பெர்னாண்டோ, கிழக்காசிய தேசிய கிறிஸ்தவ மன்றச் செயலாளர் அருட்திரு. றெயன்சி பெரேரோ, யாழ் மறைமாவட்ட நிர்வாகி அருட்திரு. டொனால்ட் கனகரத்தினம் ஆகியோரும் வந்துள்ளனர்.

நேற்று மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இவர்கள் ஊர்வலமாக கருணா நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## மெதடிஸ்த குருமார் குழு நேற்று யாழ்ப்பாணம் வந்தது

யாழ்ப்பாணம், பெப் 3

சமாதான நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு மெதடிஸ்த திருச்சபையின் மதகுருமார் குழு நேற்று யாழ் வந்து சேர்ந்தது.

இக்குழுவுக்கு தலைமை தாங்கி வருகை தரவிருந்த மெதடிஸ்த திருச்சபையின் முன்னாள் தலைவர் சோமா பெரேரா இக்குழுவினருடன் நேற்று வரவில்லை.

ஏனையோர் நேற்று வடமராட்சி கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தில் தங்கி, அப்பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர்.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர்கள் நேரில் சந்தித்தனர்.

குழுவினர் பருத்தித்துறை, கற்கோவளம், கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபைகளுக்கும் சென்று மக்கள் குறைகளைக் கேட்டறிந்தனர்; தென்மராட்சியில் உதவி- அரச அதிபர் அலுவலகத்துக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிமனைக்கும் சென்று கலந்துரையாடினர்.

இன்று பருத்தித்துறை துறைமுகப் பகுதியையும் மந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கே வருகை தரும்

## இரு திருச்சபைக் குழுக்களும் புலிகளுடன் பேச்சு நடத்தும்

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள மெதடிஸ்த திருச்சபையின் பிரதிநிதிகளும், அங்கிலிக்கன் திருச்சபை பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை சந்தித்து பேசவிருக்கின்றனர்.

இன்றைய அரசியல் நிலை குறித்தும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இப் பிரதிநிதிகளுக்கும்' விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம் பெறவுள்ளன. (உ-8)

## டி. பி. பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 3

ஜனாதிபதியைத் தேர்தல் மூலம் மக்களே நேரடியாகத் தெரிவு செய்யும் முறை இரத்துச் செய்யப்படும். நாடாளுமன்றம் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் விதத்தில் அரசமைப்புச் சட்டம் மாற்றப்படும்.

இத்தகைய மாற்றத்தை தான் ஏற்படுத்தப் போவதாக நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் தமது கட்சித் தொண்டர்களிடையே உரையாற்றிய போது ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க அறிவித்தார்.

உத்தேச மாற்றம் குறித்து டி. பி. விஜேதுங்கா அங்கு தெரிவித்த கருத்துக்களின் சாராம்சம் வருமாறு:-

★ 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசமைப்பு முறை, நாட்டின் பெரும்பான்மை சிங்களச் சமுதாயத்தின் பிரதிநிதியாக விளங்கும் குழுக்களை அவர்களுக்கு இடையே அரசியல் கருத்து முரண்பாடுகள், பிளவுகள் போன்ற ஆபத்தான அம்சங்களுக்கு இட்டுச்செல்கிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பதவியில் தான் நீடிப்பதற்கே புது முறையை டி.பி. நாடுகிறார்

கொழும்பு, பெப். 3

கடந்த 17 ஆண்டுகளாக நீடித்து வரும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை மேலும் நீடிக்கச் செய்யும் உபாயமாகவே, ஜனாதிபதி தேர்தல் முறையை மாற்றி அமைக்கும் திட்டத்தை டி. பி. விஜேதுங்க முன்வைத்திருப்பதாகத் தோன்றுகின்றது என பி.பி.ஸி விமர்சித்திருக்கிறது.

டி. பியின் உத்தேச திட்டத்தின் பின்னணி குறித்து அவதானிகள் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:-

★ வடக்குக், கிழக்கில் பெரும் பகுதியும் தனது கட்டுப்பாட்டில் இல்லாததால் அங்கு தேர்தல் ஒன்றை நடத்த முடியாத நிலையில் அரசு உள்ளது. அந்தப் பகுதிகளை விட்டு விட்டு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த முடியாது.

ஆகவே இந்த ஆண்டு இறுதியில் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை நாடு முழுவதிலும் நடத்த முடியாது என்ற அச்ச உணர்வு அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதித் தேர்தல் முறையை மாற்றுவதன் மூலம் அந்தப் பிரச்சினையைச் சமாளிக்க அரசு திட்டமிடுகிறது.

(4 ஆம் பக்கம்பார்க்க)

## பல சட்டச் சிக்கல்களை டி. பி. எதிர்நோக்க வேண்டி வரும்

கொழும்பு பெப். 3

ஜனாதிபதி தேர்தல் முறையை இரத்துச் செய்யும் முயற்சியில் பல்வேறு சட்டச் சிக்கல்களை ஜனாதிபதி விஜேதுங்க எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது

ஜனாதிபதித் தேர்தல் முறையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற தனது யோசனையை —

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஐ. தே. க பரிந்துரை செய்திருப்பதாக டி. பி. விஜேதுங்க கூறியுள்ளார்.

இந்த யோசனையை தெரிவுக் குழு ஏற்று தனது சிபார்சாக வெளியிட்டாலும் —

அதனடிப்படையில் அரசமைப்பு திருத்தப்படுவதற்கு முன்னர் அது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசமைப்புத் திருத்தம் என்பதால் அது தொடர்பான சட்ட மூலத்தை உயர் நீதி மன்றம் பரிசீலித்த பின்னர் —

சட்டமூலத்தை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றும்படியோ அல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முனி




அரசியல் குளறுபடிகளை ஒப்பேத்திறதிலை உவர் டிங்கிரி பண்டா எமனாத பேர்வழி போல......!

## புலிகளுடன் பேசவும் டி.பி. தயாராம்!

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவே தமது அரசு விரும்புகிறது என்று ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க கூறியிருக்கிறார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் கட்சித் தொண்டர்களிடையே உரை நிகழ்த்திய போதே இந்தக் கருத்தையும் அவர் வெளியிட்டார் என இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

எந்த ஒரு தேசியப் பிரச்சினை குறித்தும், இலங்கையின் எந்த ஒருகுழுவுடனும் பேச்சு நடத்த தமது அரசு தயாராக இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

## எம். பிக்கள் கட்சி மாறவும் சட்டத் திருத்தத்தில் ஏற்பாடு?

கொழும்பு, பெப் 3

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியை இழக்காமலேயே கட்சி மாறுவதற்கு வழிசெய்யும் சட்டத் திருத்தமும் அரசமைப்புக்குக் கொண்டு வரப்படவிருப்பதாக சிங்கள வ[illegible] ஒன்று செய்தி [illegible]ருக்கிறது.

தற்போதைய அரசமைப்புச் சட்டப்படி—

எம்.பி. ஒருவர் ஒரு கட்சியை விட்டு இன்னொரு கட்சிக்கு மாறினால் அவர் தமது பதவியை இழந்தவராவார். அதுவரை அவர் எந்தக் கட்[illegible] வரை அ[illegible]றா[illegible]ருவரை எம்.பியாக நியமிக்க அரசமைப்பில் வழி செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் இது தொடர்பான அரசமைப்பு ஏற்பாடுகளை மாற்றியமைப்பது குறித்து அரசு உயர்பீடம் தீவிரமாக ஆலோசித்து வருகிறதாம்.

அரசமைப்புக்கு அரசு கொண்டு வரவிருக்கும் உதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை சுதந்திர தினம்:

## கொழும்பில் புலிகள் குண்டுத் தாக்குதல்?

கொழும்பு, பெப். 3

நாளை நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்காவின் சுதந்திர தின விழாவை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்பு மாநகரில் குண்டுத் தாக்குதல்களை நடத்தலாம் என்று அஞ்சி, கொழும்பு மாநகரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்காவின் 46 ஆவது ஆண்டு சுதந்திர தின விழா நாளை வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவிருப்பது தெரிந்ததே.

அன்றைய தினம் நடைபெறும் நிகழ்ச்சியின் போது விடுதலைப் புலிகள் குண்டுத் தாக்குதல்களை தலைநகரில் மேற்கொள்ளலாம் என புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன என்று பொலீஸார் தரப்பில் கூறப்பட்டது.

### அதிமேற்றிராணியார்

## புலிகளுடன் நடத்திய பேச்சு விவரம் ரணிலிடம்!

அண்மையில் யாழ்ப்பாணத்துக்குச் சென்ற சமயம் அங்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையை, கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையிலான கத்தோலிக்க மதத் தூதுக்குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கையளித்தது. [உ-எ-6]

## நெடுங்கேணியில் விமானக் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 3

முல்லைத்தீவு நெடுங்கேணிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இரண்டு புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

மக்களின் குடியிருப்புப்பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலால் ஒருவர் காயமடைந்தார்.

வீடு ஒன்று முற்றாக சேதமடைந்தது. பல மரங்கள் முறிந்து விழுந்தன.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவர்கள் குண்டு வீச்சு இடம்பெற்ற போது சிதறி ஓடினர்.

குண்டு வீச்சால் வகுப்புகள் நடைபெறாமல் குழம்பின.

### ஐ. தே. கவில் மீண்டும்

## காமினியை சேர்த்ததால் அமைச்சரவையில் பிரிவு

கொழும்பு, பெப். 3

காமினி திஸநாயக்காவை ஐக்கியதேசியக் கட்சியில் மீண்டும் சேர்த்துக்கொண்ட விஷயம் குறித்து அமைச்சர்கள் இரு குழுக்களாக பிரிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ தே.க. வட்டாரங்களின் படி —

அமைச்சர்கள் பெஸ்டஸ் பெரேரா, வீரசிங்க மல்லிமாராச்சி, பி. தயாரத்னா, விஜேபால மெண்டிஸ் ஆகியோர் காமினியைச் சேர்த்துக் கொண்டதை ஆதரித்துள்ளனர் என்றும் —

சிறிசேன குரே, ரணில் விக்கிரமசிங்கா, காமினி அத்துக்கோறளை, நந்தா மத்தியூ, ரேணுகா ஹேரத், சந்திரா பண்டாரா ஆகியோர் காமினியைச் சேர்த்ததை விரும்பவில்லை என்றும் "சண்டே ஐலண்ட்" தெரிவித்துள்ளது. (உ-எ)

## கிழக்கு பல்கலைக்கழகத்தை இடம் மாற்றுவதற்கு முயற்சி

மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தை அங்கிருந்து அகற்ற ஏற்பாடுகள் இடம்பெறுவதாக மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்வி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

1981 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் கிழக்கு பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

அந்தப் பல்கலைக்கழகத்தை முஸ்லிம் பிரதேசத்துக்கு இடம்மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் —

இதற்கு பலத்த அரசியல் பின்னணி இருப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது

இப்பல்கலைக் கழகம் இடமாற்றப்பட்டால், திருகோணமலை முதல் அம்பாறை வரை வாழும் தமிழ் மாணவர்கள் பெரிதும் கஷ்டமுறுவர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

முஸ்லிம் மாணவர்கள் வந்தாறுமூலைக்கு வந்து கல்வி பயில முடியாததாலேயே இடமாற்றக் கோரிக்கை எழுந்துள்ளதாம். (உ-3)

### பொறுப்பற்று எழுதுகின்றன!

## கொழும்புப் பத்திரிகைகளை யாழ். அரச அதிபர் சாடுகிறார்

கொழும்பு, பெப். 3

"ஜனவரி 24 ஆம் திகதிய "ஐலண்ட்" பத்திரிகை வடக்குக்கு உணவு மற்றும் எரிபொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு போதியளவு உணவுப் பொருள்கள் இருப்பில் இருப்பதாகவும் செய்தி வெளியிட்டிருக்கிறது

"ஆனால் அது குறிப்பிடும் எந்தப் பொருள்களும் இன்னமும் கப்பல்களுக்குள் ஏற்றப்படக்கூட இல்லை" என்பதே உண்மை இவ்வாறு தான் வடக்குக்கான உணவு விநியோகம் பற்றி கொழும்புப் பத்திரிகைகள் பொறுப்பற்று எழுதி வருகின்றன

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து வெளிவரும் வாரப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் கூறியதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காமினி வெளிநாடு செல்வார்

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேர்ந்த பின்னர் திரு. காமினி திஸநாயக்கா, முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை சென்று சந்தித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த சில வாரங்களில் காமினி வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சு. வைத்திலிங்கம்

(இளைப்பாறிய செனட் சபை, உத்தியோகஸ்தர்)

அரசடி வீதி இருபாலையைச் சேர்ந்த சு. வைத்திலிங்கம் 02-02-94 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற திருமதி வள்ளிப்பிள்ளையின் கணவரும், திரு. வை. சுப்பிரமணியம் (பிரதிப் பொது முகாமையாளர், கிழக்கு மாகாணம் இலங்கை மின்சாரசபை), Dr. வை. தியாகராஜா (உரிமையாளர் மெடி எயிட்ஸ் நிறுவனம், தலைவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய் உதவி, அரச அதிபர் பிரிவு, உபதலைவர் லயன்ஸ் கழகம் கோப்பாய், போஷகர் மக்கள் நலம் காக்கும் பிரிவு கோப்பாய்,) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி சு. திலகவதி, திருமதி தி. றஞ்சிதமலர் ஆகியோரின் மாமனாரும், சுகந்தினி, சுரேந்திரன், சுதர்சினி, சுரேஸ்குமார், றஜிவதனி, றிஸ்வி, பிரசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-02-94) பிற்பகல் 2 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
Dr. வை. தியாகராஜா

''ராஜஸ்தான்''
இருபாலை,
கோப்பாய். (29344)

### திருமதி மனோன்மணி பசுபதி

பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த திருமதி மனோன்மணி பசுபதி 31 - 1 - 94 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நா. க. பசுபதியின் அன்பு மனைவியும், அசுபதி (புகையிரதத் திணைக்களம்), திருப்பதி (வீடமைப்புத் திணைக்களம்), இரகுபதி (பொறியியலாளர் - U. K.), ஜெகசிவமணி (U. K.), கணபதி (திட்ட முகாமையாளர் கொலவினோ நிறுவனம், கொழும்பு), ஆனந்தநடேசன் (இலங்கை வங்கி, சாவகச்சேரி) பேரின்பயசோதா (V. K. Enter Prises) ஆகியோரின் அன்புத் தாயாரும், குலவீரசிங்கம் (துறைமுக அதிகார சபை திருகோணமலை), தர்மபாலன் (விலை மதிப்பீட்டாளர், விலைமதிப்புத் திணைக்களம்], மங்கையர்க்கரசி (U. K.), விஜயராஜசிங்கம் (U. K) கலாஜோதி, தனவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமேஷ், ரஞ்சன், குலரூபினி, விசாகன், குலநந்தினி, தனஞ்சயன், ஜனனன், விதுர்த்திரா, ஆதித்தியா, நிருபன், செந்தூரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக வியாழன் (3 - 2 - 94) காலை 9 மணியளவில் பருத்தித்துறை கடற்கரையில் உள்ள வெளிச்ச வீட்டுக்கு அருகில் உள்ள மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
ப. ஆனந்தநடேசன்

புலோலி கிழக்கு,
கல்லடி ஒழுங்கை,
தம்பனை வீதி,
பருத்தித்துறை. (29233)

### இ. கனகசபாபதி

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகக் கொண்ட இராசா — பொன்னம்மா ஆகியோரின் மகன் கனகசபாபதி 2-2-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், நெடுங்கேணி சௌந்தரேஸ்வரி நகை தொழிற்சாலை உரிமையாளரும், சாமுண்டீஸ்வரி, கமலலோயினி, அருணகிரிநாதன் (மேற்கு ஜேர்மன்), விவேகானந்தராசா (சௌந்தரேஸ்வரி நகை தொழிற்சாலை — கிளிநொச்சி), திலகவதி (இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியை), சிவானந்தன் (மேற்கு ஜேர்மனி), கைலயங்கிரி வாசன், குகதாஸ். நிஜிதா, இந்திரதாஸ் ஆகியோரின் அன்பு தகப்பனும், சிவராசா, வரதராசா ஆகியோரின் மாமனாரும், செந்தில்குமரன், கஜநினி, சுஜானந்தன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
க. விவேகானந்தராசா
(மகன்)

பூனாறிமரத்தடி,
கொக்குவில். (29240)

### திருமதி சின்னத்தம்பி ஆச்சிமுத்து

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி ஆச்சிமுத்து 2- 2 - 94 இல் இறைவனடியெய்தினார்.

இவர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், அளலிங்கம் (ஓய்வு பெற்ற யாழ். போதனா வைத்திய சாலை காவலாளி), ச. பவளம் ஆகியோரின் அன்புத் தாயாரும், அ. மேரிபொலின் (தாதிய உத்தியோகஸ்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சி. சுந்தரம் ஆகியோரின் மாமியாரும். அ. லிங்ககுமார் (U K), அ. லிஷாங்கி, அ. இராங்கி (கன்னியர் மடம் மிழ் கலவன் பாடசாலை), அ. அலஸ்ரீன்குமார் (யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (வியாழன்) பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
அ. அலஸ்ரீன்குமார்
(றூபன்)

கோப்பாய். (29238)

# பிரச்சினைக்கு யுத்த களத்தில் தீர்வுகாண இருதரப்பும் முடிவு

பத்து ஆண்டுகளாக நடக்கும் இனப்போரில் அமைதி, சமாதானத்தை கொண்டுவருவதற்காக வெளி நாடுகள் சமரசம் செய்துவைக்க வேண்டும் என்று வெவ்வேறு குழுக்கள் வெவ்வேறு கால கட்டத்தில் குரல் எழுப்பி வந்துள்ளன.

நேரடியாக இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரும் இந்த விஷயத்தைத் தட்டிக்கழித்து இப்போது தமது வேற்றுமைகளுக்கு போர்க்களத்தில் தீர்வு காண முடிவு செய்திருப்பது போல் தெரிகிறது.

— இவ்வாறு பி. பி. ஸியில் இலங்கை பற்றிய கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் கூறப்பட்டதாவது:-

இனப்பிரச்சினையில் ஐ.நா. தலையிடுவதை இலங்கை எதிர்த்தே வந்துள்ளது.

கடந்த காலத்தில் இதே காரணத்திற்காக கொமன்வெல்த் அமைப்பின் சமரச முயற்சியை நாசூக்காக, ஆனால் உறுதியாக இலங்கை நிராகரித்து வந்துள்ளது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் வெளியார் சமரச முயற்சி என்று வரும்போது தனக்கே உரித்தான உறுதியான பதில் ஏதும் கூறாத நிலையை அதுகடைப்பிடித்து வருகிறது.

இலங்கை மக்களின் பல பிரிவுகளில் இருந்து இப்பிரச்சினையில் சர்வதேச உலக அரங்கு சம்பந்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தீவிரமாகி வரும் வேளையில் கூட—

வெளிநாடுகள் சமரசம் செய்யக்கூடிய ஏதுநிலை அவ்வளவாக இல்லை என்றே கூறவேண்டும்.

தகராற்றில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் அரசியல் தத்துவங்கள் கூடிய கடும் போக்கை காட்டுகின்றன,

ஐ. நாவின் சமரச முயற்சிகளை ஏற்கும்படி இலங்கைக்கு நெருக்கடி கொடுக்குமாறு வெளிநாடுகளில் உள்ள தமிழ்க் குழுக்கள் அரசுகளிடையே பிரசாரம் செய்து வருகின்றன.

ஆனால், உண்மை என்னவென்றால் அனைத்துலகில் முக்கியமான பிரச்சினைகள் உள்ள நாடுகள் என்ற பட்டியலில் இலங்கையின் பெயர் கீழே வந்துவிட்டது.

பொஸ்னியா தகராறும் சோமாலியாவில் ஐ.நாவுக்கு ஏற்பட்ட அனுபவமும் இலங்கையில் அமைதி காக்கும் அனைத்துலகப்பணி என்ற ஏது நிலையை வெகு தொலைவிற்கு இறக்கி விட்டன.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இப்போதைய நிலையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் வரை இலங்கையில் அனைத்துலக சமரச முயற்சி என்பது நடக்கமாட்டாது என்பது நிச்சயம்.

எந்தவிதமான வெளியார் சமரச முயற்சியும் வெகு தொலைவில் இருப்பதுபோல் தெரிகிறது. இது வேதனை தரும் விஷயம்— இப்படி அதில் கூறப்பட்டுள்ளது.

## யாழ். ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் நீங்கும்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு, ஊழியர் பற்றாக்குறை, ஆஸ்பத்திரி அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் ஊழியர்களின் நல வசதிகள் சம்பந்தமாக கொழும்பில் நடத்திய பேச்சுகள் சாதகமான பலன்களைத் தந்துள்ளன.

இப்பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு கொழும்பு சென்று நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய வைத்தியசாலைக் குழு வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன.

போதனா வைத்தியசாலைகள் அமைச்சின் தலைமையக அதிகாரிகளுடன் மேற்குறிப்பிட்ட விடயங்கள் சம்மந்தமாக யாழ். வைத்தியசாலைக் குழுவினர் பேச்சு நடத்தி இங்குள்ள நிலைமைகளை விளக்கினர்.

இடைநிறுத்திவைக்கப்பட்ட பரிசாரகர் பயிற்சியை யாழ்ப்பாணத்தில் நடத்தவும் பேச்சுக்களின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

மூவர் அடங்கிய யாழ். வைத்தியசாலைக் குழு கொழும்பிலிருந்து பலாலிக்கு விமானத்தில் வந்து அங்கிருந்து கப்பலில் நேற்று பருத்தித்துறை சேர்ந்தது. (அ-15-173)

பல சட்டச்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லது சர்வசன வாக்கெடுப்பு மூலம் சட்டமூலத்தை நிறைவேற்ற மக்களிடம் அனுமதி பெறும்படியே தீர்ப்பளிக்கும்.

இந்த இரண்டில் எந்தத் தீர்ப்பு வந்தாலும் அது டி. பியின் அரசுக்கு சங்கடத்தையே கொடுக்கும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையே மாற்றும்படி வலியுறுத்தி வரும் ஸ்ரீ ல சு கட்சி ஒருபோதும் இந்த மாற்றத்தை ஆதரிக்கப் போவதில்லை. ஆகவே அதன் ஆதரவின்றி நாடாளுமன்றில் அரசு, இந்தச் சட்ட மூலத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறமுடியாது.

சர்வசன வாக்கெடுப்பு நடத்தும்படி நீதிமன்றம் பணித்தாலும்—

ஒரு தேர்தலை இரத்துச் செய்வதற்காக மற்றொரு தேர்தலுக்கு பணம் செலவிடுவதா எனக் கேள்வி எழும்பும்—

அதேவேளை—

சர்வசன வாக்கெடுப்பில் ஐம்பது வீத வாக்கைப்பெற்று வெற்றி பெறலாம் என்றால், அதைவிட ஜனாதிபதி தேர்தலை நடத்தி வெற்றிபெற்று விடலாமே என்ற கேள்வி டி. பிக்கு எதிராக எழும்.

இரண்டுமே ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு சிக்கல் தருவதாகவே இருக்கும். —இவ்வாறு அவதானிகள் சுட்டிக் காட்டினர். [உ]

மெதடிஸ்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அவர்கள் பார்வையிடவிருக்கின்றனர்.

நாளை வெள்ளிக்கிழமை மதியவேளையில் இக்குழுவினர் யாழ். நகர் வருவர். (உ-3)

ராணுவத்தில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திய மாகாணங்கள் உள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கியதான பகுதி மூன்றாவது டிவிஷனின் பொறுப்பில் உள்ளது.

புதிதாக உருவாக்கப்படவுள்ள டிவிஷன்களில் அனுராதபுரம் மற்றும் வன்னிப் பகுதிகளை உள்ளடக்கியதான ஒரு டிவிஷன் இருக்கும்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்குப் பொறுப்பாக 4 ஆவது டிவிஷன் படையும்—

முல்லைத்தீவு மற்றும் திருகோணமலைக்குப் பொறுப்பாக 5 ஆவது டிவிஷன் படையும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது [உ-எ 3]

மன்னாரில்---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை விட்டு வெளியேறும் நிலையில் அவர்கள் இல்லை என்று படையினர் மற்றும் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வங்காலையில் மட்டும் குறைந்தது 50 வீடுகளில் படையினர் தங்கியுள்ளனர். பேசாலையில் 34 வீடுகள் படையினர் வசம் உள்ளன. (உ-எ)

எம்பிக்கள்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேச திருத்தத்தின்படி—

ஒரு எம்.பி கட்சி மாறினாலும் அவர் தொடர்ந்து எம். பியாக பதவி வகிக்க முடியும்.

ஆளும் ஐ. தே. கவுக்கு தற்போது நாடாளுமன்றில் 125 எம். பிக்கள் உள்ளனர். நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பலம் பெற ஐ.தே. கவுக்கு இன்னும் 25 எம். பிக்கள் தேவை.

அரசமைப்புத் திருத்தத்தை ஏற்படுத்தி அதன் பின்னர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 25 எம். பிமார்களை விலைக்கு வாங்க அரச உயர்பீடம் திட்டமிட்டுள்ளதாம்.

இந்தத் திட்டப்படி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றால் —

அதை வைத்துக் கொண்டு இலகுவாக ஜனாதிபதித் தேர்தல் முறையை இரத்துச் செய்யலாம் என அரச உயர்பீடம் கருதுகிறதாம். (உ-9)

கொழும்புப்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது:

வடக்குக் கிழக்கில் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்; அதன் அழிவுகளிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மக்கள் பற்றி கொழும்பில் உள்ள பத்திரிகைகள் கூட அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை — என்றார். (உ-க)

ஜனாதிபதியை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ இது நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு மீறிய அளவில் அவர்கள் உரிமை கொண்டாடவும் வகை செய்கிறது.

★ இதனால்தான் நாடாளுமன்ற மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யும் முறையைக் கொண்டு வருவதை நான் ஆதரிக்கின்றேன்.

★ புதிய ஜனாதிபதி தேர்தல் முறை அரசியல் மோதல்களைக் குறைக்கும்.

★ ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு நாட்டில் தேர்தல் ஒன்றை நடத்தும் முறை ஒழிக்கப்படுவதனால் சுமார் 40 கோடி ரூபா நிதியை மிச்சப்படுத்தலாம். (உ-எ க-3-6-9)

### இன்று

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆரம்பமாகி இன்றுடன் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

இந்நிகழ்வை முன்னிட்டு தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் இன்று ஸ்நபன அபிஷேகம், விசேட பூசை வழிபாடு ஆராதனைகளும், அன்னதானமும் இடம்பெறும். (உ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 3

சுழிபுரம் மத்தி ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும். (அ)

பதவியில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல் வரும்போது யுத்தத்தைக் காட்டி — அப்பகுதிகளில் தேர்தலை நடத்தாமல் — மற்றைய இடங்களில் தேர்தலை நடத்தி, புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டலாம் என அரசு எண்ணுகிறது. ஆனால் இத்திட்டத்தை ஜனாதிபதித் தேர்தலில் செயல் படுத்த முடியாது.

★ ஜனாதிபதித் தேர்தலில் தாம் இப்போது வெற்றிபெற முடியுமா என்ற சந்தேகம் டி. பி. விஜேதுங்கவுக்கு ஏற்பட்டுள்ளது.

முதலில் ஜனாதிபதியின் பதவிக் காலமும், பின்னர் தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட் காலமும் முடிவடைவதால் —

தற்போதைய நாடாளுமன்றத்தில் ஐ. தே. கவின் பெரும்பான்மைப் பலத்தை வைத்து அடுத்த ஜனாதிபதியாக தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள டி. பி. முயற்சிக்கிறார். அதற்காக ஜனாதிபதித் தேர்தல் முறையைமாற்றி அமைக்க அவர் திட்டமிடுகிறார்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சி தோல்வி யுற்றாலும், தான் தொடர்ந்து ஜனாதிபதியாக நீடிக்க இந்த மாற்றம் வழி செய்யும் என்றும் அவர் கருதுகிறார்.

★ ஜனாதிபதித் தேர்தல் முறையை மாற்றியமைப்பதன் மூலம் —

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் சிறுபான்மையினருக்கு — தமிழர்களுக்கு — இருக்கும் அதிகாரப் பங்கை ஒழித்துவிட முடியும் என்றும் அவர் கருதுகிறார். — எனச் சுட்டிக் காட்டப்பட்டது. (உ-எ-3-6 9)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் கேள்விப் பத்திரங்கள் கோருதல்

மேற்படி ஆலயத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு தகுந்தவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

வேலைகளின் விவரங்களை ஆலய முகாமையாளரிடம் இருந்து ஆலய அலுவலகத்தில் பெற்று அதற்குரிய கூறுவிலைகளை 12-02-94க்கு முன்னர் கிடைக்க பதிவுத் தபால் மூலம் தலைவர், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பவும். கூறு விலைகள் தனித்தனியாக குறிப்பிடப்பட வேண்டும்.

1) தேர்க் கொட்டகைக்கு கதவு போடுதல்
2) தேர்முட்டித் திருத்தம்
3) பொங்கல் கொட்டகை திருத்தம்

**செயலாளர்,**
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய
தருமகர்த்தாக்கள் சபை.

(29236)

## A SERVICE OF THANKS GIVING

FOR
THE LIFE AND WORK OF
**KUNASEKARAM NESIAH**

Will be held at
St. John's Church Chundikuli
on Monday, the 7th of February 1994
at 4-00 p. m.

The participation of all Friends, Relations and Well - Wishers will be appreciated.

★ Please note that no Individual Invitations are being sent.

Devanesan Nesiah
and Members of
the Family.

20, Somasundaram Avenue,
Chundikuli. [29215]

## கண்ணீர் அஞ்சலி

டாக்டர் தியாகராஜாவின் தந்தையார்

### அமரர் சு. வைத்திலிங்கம்

[இளைப்பாறிய செனட் சபை உத்தியோகத்தர்]

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஸ்தாபனத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

ஊழியர்கள்

மெடி எயிட்ஸ் பாமசி, நல்லூர்,
மெடி எயிட்ஸ் டிஸ்பென்சரி, நாயன்மார்கட்டு,
மெடி எயிட்ஸ் டிஸ்பென்சரி, கல்வியங்காடு.

(29246)

## கண்ணீர் அஞ்சலி

டாக்டர் தியாகராஜா அவர்களின் தந்தையார்

### அமரர் சு. வைத்திலிங்கம் அவர்கள்

(இளைப்பறிய செனட் சபை உத்தியோகத்தர்)

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிக்கின்றோம்.

வன்னியசிங்கம் சனசமூக நிலையத்தினர்

அரசடி வீதி,
இருபாலை. (29245)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் கார்த்திகேசு

(சுருட்டுக் கம்பனி உரிமையாளர்)

நாயன்மார்கட்டு. சதாசிவம்-தங்கச்சியம்மா தம்பதிகளின் மூத்த புதல்வன் கார்த்திகேசு காலமானார்.

இவர் உருக்குமணியின் அன்புக் கணவரும், வதனராணி, செல்வராணி, சரோஜினிதேவி, திலகராணி (பாலர் பாடசாலைப் பொறுப்பாளர், தேசிய சர்வோதய சிரமதான இயக்கம்), கமலராணி, மோகனதாஸ் (நோர்வே), ஜெயதாஸ் ஆகியோரின் அருமைத் தந்தையும், மகேந்திரராஜா, வசந்தகுமார் (யா. மா. ந. ச. மின்சாரப் பகுதி), ஆறுமுகம் (கிரான்), சாந்தி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், தக்ஷிகா, லஜிதா, காண்டீபன், பபித்தா, காலஞ்சென்ற தனுஷா, பிரியா, யசோதா, ஷாண்டீபன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மகாலிங்கம், வீரசிங்கம் (யா. மா. ந. ச. மின்சாரப் பகுதி), இரத்தினசிங்கம் (அரசினர் வைத்தியசாலை), பாலசிங்கம், துரைசிங்கம், சுந்தரலிங்கம் (றோயல் சவுண்ட்ஸ்), மன்மதராசா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
கா. ஜெயதாஸ்
(மகன்)

9/12, திருமகள் வீதி,
நாயன்மார்கட்டு. (29239)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் ... சந்தியிலுள்ள அச்சகத்தில் 03-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இழப்பிலும் கவலையில்லை

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஐயாயிரத்துக்கும் அதிகமான படையினர் பலியாகி உள்ளனர். 1991 ஜனவரி தொடக்கம் 1993 நவம்பர் 11 ஆம் திகதி வரை மட்டும் 3,683 பேர் மாண்டிருக்கின்றனர்.

அரசின் தரப்பில் இத்தனை படையினரின் இழப்பு மட்டுந்தானா? இல்லை. கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களை விடுதலைப்புலிகளிடம் இழந்திருக்கிறது. நாட்டின் மொத்தச் செலவில் சுமார் 30 சதவீதம்பாதுகாப்புக்கு விரயமாகியபோதிலும் அரசின் படைகளில் பணிபுரிவோரின் மனோபலம் குன்றிப் போவதும் அந்தப் பக்கத்துக்குப் பேரிழப்பே. அது ஒரு வகைத் தோல்வியுமாகும்.

இத்தனை ஆளணி, பொருள் இழப்புகளின் மத்தியிலும் அரசாங்கம் தான் நினைத்தது போல தமிழ்ப் பகுதிகளை முற்றாக ஆக்கிரமிக்க முடிந்ததா என்றால், இயலவில்லை அரசின் வார்த்தைகளில் சொல்வதானால் தமிழ்ப் பிரதேசங்கள் முழுவதையும் படைகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியவில்லை!

இதனை அனுபவ ரீதியாகக் கண்டுகொண்ட பின்னரும், உணர்ந்துகொண்ட பின்னரும் அரசாங்கத்தினர்— தெற்கின் அரசியல் தலைவர்கள் — யுத்தத்தை நிறுத்துவதற்கு மனம் கொள்வதாக இல்லை இவ்வளவு இழப்புகள் தோல்விகளின் பின்னரும், மான, ரோசம் கெட்டுப்போன நிலையில் போராட்டத்தைத் தொடரவே விரும்புகிறார்கள். சமாதானமாகவும், நியாயமாகவும் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் சிறிதும் நாட்டம் கொள்ளவில்லை.

தமது பக்கத்தில் இழப்புகளும் தோல்விகளும் ஏற்படுகின்றதே என்ற கவலையால் யுத்தம் நிறுத்தப்படவேண்டும்; சமாதானம் உருவாக்கப்பட வேண்டும் என்று விரும்பும் ஒரு சிலர் தெற்கில் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் அதிகாரமோ ஆகக் குறைந்தது அதிகாரபீடத்தில் உள்ளவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் சக்தியோ, வல்லமையோ இல்லாதவர்களே.

யுத்தத்தினால் அரசாங்கத்தைவிடப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே. அவர்களுக்கு உண்டான உயிரிழப்பு உடைமை இழப்பு. பொருளாதார இழப்பு என்பன அரசுக்கு உண்டானதைவிட பலமடங்காகும். அவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களின் நாளாந்த வாழ்க்கையே போராட்டமாக மாறியுள்ளது.

எனினும் அவர்கள் இவை எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு, அனுபவித்துக் கொண்டிருப்பது தமது விடுதலையைப் பெற்றுவிடவேண்டும் என்ற இலட்சியத்துக்காகவே. இதனைக்கூட அரசு விளங்கிக்கொள்ளவில்லை. இராணுவ நடவடிக்கைகள் மூலம் நேரடியாகவும் ஏனைய அழுத்தங்கள் மூலம் மறைமுகமாகவும் தமிழர்களைக் கொன்றால் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற முழு முட்டாள்தனமாகவே அது செயலாற்றி வருகிறது. அந்த முட்டாள்தனத்தின் பின்னால் நிற்பது சிங்கள-பௌத்த பேரினவாதப் போதையாகும்.

அந்தப் போதை நீங்கும் வரை, நீக்கப்படும் வரை, சிங்களச் சிப்பாய்கள் யுத்தகளத்தில் ஆயிரக் கணக்கில் மடிந்தாலும், சிங்கள அரசியல் தலைவர்களும் அவர்களுக்கு உருவேற்றிவிடும் பேரினவாதிகளும் அது குறித்து அக்கறைப்படப் போவதில்லை; கவலைப் படப்போவதில்லை.

இதனைத் தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது. தமது இலட்சியத்தின் மீதான குறியை, இலக்கை தளர்த்திவிடக்கூடாது.

ஜே. வி. பி. கிளர்ச்சிக்கால புதைகுழிகள்

# ஐ.தே.கட்சி பிரமுகர்களுக்கு எதிராகவும் ரகசியப் பொலீஸில் புகார்

கொழும்பு, பெப். 3

சூரிய கந்தவிலும் மற்றும் பல இடங்களிலும்— ஜே. வி. பி. காலத்தில் கொன்று புதைக்கப்பட்ட சம்பவங்களுக்கு தலைமை வகித்ததாக பல ஐ. தே. க. பிரமுகர்களின் பெயர்கள் அடங்கிய முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாக ரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஐ. தே. கவின் முக்கிய பிரமுகர்களான காமினி லொக்குகே, ஜீ. ம. மகிந்தசோமி, எம். ஜீ. பி. நெச்சன், ஏ. எம். எஸ். அதிகாரி, போல் பெரேரா, எம். எஸ். அமரசிரி, எச். ஆர். பியசிரி, ஜீ. வி. புஞ்சி நிலமே, எச். எம். லொக்குபண்டா ஆகியோரே சம்பந்தப்பட்ட ஐ. தே. க. பிரமுகர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு இடங்களில் அப்பாவிகள் கொல்லப்பட்டதற்கு இவர்கள் காரணமாக இருந்தது தொடர்பாக ஆதாரபூர்வமான தகவல்கள் தமக்கு கிடைத்துள்ளது என்று ரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வியாங்கொடைப்பகுதியில் இடம்பெற்ற பல கொலைகள் தொடர்பாக மேஜர் கொத்தலாவல சம்பந்தப்பட்டிருப்பது பற்றியும் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக ரகசியப் பொலீஸார் கூறுகின்றனர்.

இன்னும் கந்தானைப் பகுதியில் 150 இளைஞர்கள் தலையிலே வெடிவைத்துக் கொல்லப்பட்டது தொடர்பாகவும்—

அம்பஹராப் பகுதியில் ஒரே ஊரைச் சேர்ந்த 56 பேர் கொல்லப்பட்டு வீடொன்றின் முற்றத்தில் புதைக்கப்பட்டது தொடர்பாகவும்—

கேணல்— கருணாதிலக என்பவருக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவாம்.

மற்றும் குருநாகலில் ஒரு புதைகுழி ''ஏக்க நாயக்கா புதைகுழி'' என்ற பெயரில் இயங்கி வந்ததாகவும்—

எக்கநாயக்கா என்ற அரசியல்வாதி தனது சொந்தப் பகை காரணமாகக் கொல்லப்படுபவர்களை புதைப்பதற்கான இந்த புதைகுழியை பயன்படுத்தியதாகவும் ரகசிய பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவல்களை 'லக்திவ' என்ற சிங்களப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பாக பல அரசியல் வாதிகள், பொலீஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் சட்டவிரோதமான கும்பல்கள் ஆகியோருக்கு எதிராக தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும், இந்த ஆதாரங்கள் அனைத்தும் அந்த நபர்களுக்கு கீழ் இயங்கி வந்தவர்களிடமிருந்தே கிடைத்துள்ளதாகவும்— இது பற்றி தீவிர விசாரணையை மேற்கொள்ள ரகசியப் பொலீஸ் அதிகாரி ஒருவர் முயற்சி எடுத்தபோது— அதற்கு அரசாங்கத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் தடைவிதித்துவிட்டதாகவும் 'லக்திவ' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ-9)

## மீனவர் கூட்டுறவு சங்கங்கள் வலிகாமம் மேற்கில் அமைப்பு

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சுமார் 100 மீனவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் சகல கிராம உத்தியோகத்தர்கள் பிரிவிலும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே மீனவக் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் சகல மீனவர்களும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவராகச் சேரவேண்டும் என்றும் வட்டுக்கோட்டை கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-175)

## உப்பு உற்பத்தி தன்னிறைவு: அதிக விலை நியாயமற்றது

### த. பொ. மே. நி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழீழத்தின் உப்பு உற்பத்தித் தொழில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளால் புது வளர்ச்சிபெற்றதோடு, சுயதேவையில் தன்னிறைவைத் தாண்டி அடுத்த ஆண்டுக்கான தேவையில் ஒரு பகுதியை பூர்த்தி செய்யக்கூடிய கையிருப்பையும் கொண்டுள்ளது.

போரின் ஆரம்ப கட்டத்தில் கிலோ 30/- வரையில் விலை போன உப்பு உள்ளூர் உற்பத்தியினால் தற்போது கிலோ 10/- வாகக் குறைந்துள்ளது. சில விற்பனை நிலையங்களில் ஒன்பது ரூபாவுக்கும் விற்கப்படுகின்றது.

குறைந்த விலையில் சில்லறை விற்பனை செய்யக்கூடியதாக உப்பின் மொத்த விலை விநியோகம் தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பல்வேறு இடங்களில் பலவிதமான விலைகளில் உப்பு விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் உற்பத்தியான உப்பு தாராளமாகக் கையிருப்பில் இருப்பதால் தென்னிலங்கையில் இருந்து உப்பைக் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. கொள்ளை லாபம் சம்பாதிப்பவர்கள் பல்வேறு பொய்க் காரணங்களைக் கூறி அதிக விலைக்கு உப்பு விற்பனை செய்கிறார்கள். உப்பை அதிக விலைக்கு விற்பதற்கு எந்த வித நியாயமும் கிடையாது என்று த.பொ.மே.நி. தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## காலை நேர பாடசாலைகளாக மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 3

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த வயாவிளான் றோ. க. பாடசாலை புத்தூர் சந்திக்கு அருகிலுள்ள கட்டடமொன்றில் காலை நேரப் பாடசாலையாகத் தற்போது இயங்குகிறது.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அண்மையில் இப்பாடசாலையைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதே கோட்டத்தைச் சேர்ந்த பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை, மகாஜனக் கல்லூரி, வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை என்பனவும் காலை நேரப் பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மாதகல் நுணசை சைவ வித்தியாலயம் மானிப்பாயில் தனியான கட்டடமொன்றில காலை நேரப் பாடசாலையாக இயங்குகிறது பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் கடந்த தைப் பூசத்தினத்தன்று இப்புதிய கட்டடத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதே கோட்டத்தைச் சேர்ந்த இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம், இளவதலை கென்றியரசர் கல்லூரி, மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயம், மாதகல் சென்தோமஸ் றோ. க. பாடசாலை என்பனவும் காலை நேரப் பாடசாலைகளாக மாற்றப்பட்டுவிட்டன. மாலை வேளைகளில் இயங்கும் ஏனைய பாடசாலைகளையும் காலை நேரத்தில் இயங்கச் செய்வதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. (இ)

## வேர்படி மாணவிக்கு பரிசு

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தால் நடத்தப்பட்ட விஞ்ஞானக் கட்டுரைப் போட்டியில் தமிழ் மொழிப் பிரிவில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் மாணவியான செல்வி அங்கரி பரம்சோதி 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

12ஆம் ஆண்டு விஞ்ஞானப் பிரிவு மாணவியான செல்வி அங்கரி ''அன்றாட வாழ்வில் இரசாயனம்'' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.

இதற்கான பரிசளிப்பு வைபவம் கடந்த டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடக் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. (க)

## கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சை 19 ஆம் திகதி

யாழ்ப்பாணம், பெப். 3

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் கூட்டுறவுப் பரிசோதகர் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என அரச அதிபர் கொழும்பில் இருந்து யாழ் செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

இடை நிலைத் தொழில்நுட்பவியலாளர் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவிருந்த கணக்காய்வாளர் பரீட்சை ஏப்பிரல் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(அ-5)

## ஆலயங்களில்

நல்லூர்சட்டநாதர் வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீபொன்னையடி வைரவசுவாமி கோவிலில் இன்று வியாழக்கிழமை 1008 சங்குகளால் வருடாந்த விசேஷ அபிஷேகமும் மாலையில் திருவிழாவும் நடைபெறும். (ஏ)

## ஒளிவீச்சு காட்சி இன்று

யாழ்ப்பாணம், பெப். 3

நிதர்சனம் நிறுவனத்தினரால்வெளியிடப்பட்டசம்பமாத ஒளிவீச்சு அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று (3 2 94) மாலை 5 மணிக்கு ஒளிவீச்சு காண்பிக்கப்படும்.

யுத்தமுனையில் சாதனைகள் படைத்த போராளிகளை தலைவர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தமை, வான்படையின் குண்டு வீச்சுப் படுகொலைகள், வெள்ள அனர்த்தங்கள் உட்பட டிசம்பர் மாத நிகழ்வுகள் பல இந்த ஒளிவீச்சில் இடம் பெற்றுள்ளன. (அ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிச் சுற்றில் இன்றைய ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக்கழகம் விளையாடவுள்ளது. இப்போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் பிற்பகல் 3 00 மணிக்கு இடம்பெறும்.

(உ)

★ ★ ★

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ் றோட்டறக்ட் கழகம் நடத்திவரும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று—

பிற்பகல் 3 மணி முதல் 5 30 மணிவரை யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் பொது அறையில் கரம் போட்டிகளும்—

பிற்பகல் 2.30 மணி முதல் 5 30 மணி வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆடுகளத்தில் 'ரெனிஸ்' போட்டிகளும் இடம்பெறும். (உ)

## கோமாரியில் செல்லும் பயணிகளுக்கு!

யாழ்ப்பாணம், பெப். 3

கோமாரி கப்பல் நாளை பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்குப் புறப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் —

அதில் பயணம் செய்வதற்குத் தமது பெயர்களைப் பதிவு செய்த பிரயாணிகளை நாளை பிற்பகல் 5 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகமளிக்குமாறு யாழ். செயலகம் கோரியுள்ளது. (உ)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில்நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் கிதாலயா இசைக் குழுவினரின் மெல்லிசை இடம்பெறும்.

★ ★ ★

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கல்விக் கோட்டங்களில் உடற் கல்விப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயல் முறை அமர்வு நாளையும் நாளை மறுதினமும்காலை 8 30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பருத்தித்துறைஇந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (உ)

★ ★ ★

யாழ். இந்துக்கல்லூரி மைதான சந்தியிலுள்ள மெய்கண்ட தேவர் ஆதீன செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் தாயுமானவ சுவாமிகள், திருநீலகண்ட சுவாமிகள் ஆகியோரின் குருபூசை தின வழிபாடுகள் நடைபெறும்.

★ ★ ★

யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் பிரதேசக் கருத்தரங்கு நாளை காலை 9.30 மணி முதல் மருதனார் மடத்தில் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். ஓய்வூதிய மீளாய்வு குறித்தும் இடம்பெயர்ந்த ஓய்வூதியர் நிவாரணம் தொடர்பாகவும் விளக்க மளிக்கப்படும்.

★ ★ ★

மாவட்டமட்டத்தில் ஜி.சீ. ஈ. (உ த) பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களுக்கான செயலமர்வு நாளை காலை 8 30 மணி முதல் மாலை 4 30 மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

தமிழீழத்தில் அமைதி நிலவ வேண்டி நாளை வெள்ளிக்கிழமை யாழ். நகரில் பாதயாத்திரை ஒன்று நடைபெறவுள்ளது

பாதயாத்திரை காலை 7 மணிக்கு நல்லூர் கந்த சுவாமி ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகி வீரமாகாளி அம்மன் ஆலயம், வண்ணை சிவன் ஆலயம், பொருமாள் கோவில் ஆகியவற்றின் ஊடாக கோட்டை முனியப்பர் கோயிலைச் சென்றடையும் (அ-17)

## நாளைக்கு முன் தபாலகங்களில் சேர்க்கலாம்

தற்போது காங்கேசன்துறையில் நங்கூரமிட்டுள்ள ''கோமாரி'' கப்பல் மூலம் கொழும்புக்கும் மற்றும் வெளியூர்களுக்குமான கடிதங்கள் அனுப்பப்படுவதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நாளை காலை 9 மணிக்கு முன்னர் தங்கள் கடிதங்களை யாழ்ப்பாணம் பிரதம அஞ்சலகத்தில் உள்ள தபால் பெட்டியில் சேர்க்குமாறு பிரதம அஞ்சல் அலுவலக நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (உ-அ)

# செப்றிஸீமியா நோய் ஏற்படுவதற்குரிய காரணங்களும் தடுக்கும் ஆலோசனைகளும்

### செப்றிஸீமியா என்றால் என்ன?

''செப்றிஸீமியா'' (Septicaemia) என்ற நோய் மனிதனுடைய இரத்தம் சம்பந்தப்பட்ட அதாவது இரத்தத்தில் ஏற்படுகின்ற பிரச்சினையாகும்.

மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கு இரத்தம் மிகவும் அத்தியாவசியமானது.

ஏனெனில் உயிர் வாழ்க்கைக்கு மிக அடிப்படையான 'ஒக்ஸிஜன்' என்கிற பிராண வாயுவையும், சக்தியை வழங்குகின்ற குளுக்கோசையும் உடலின் மிக முக்கியமான உறுப்புக்களான மூளை, இருதயம், சுவாசப்பைகள், ஈரல், சிறுநீரகங்கள் உட்பட அனைத்துப் பாகங்களுக்கும் இரத்தம் காவிச்செல்கின்றது.

பின்னர் அங்கிருந்து கழிவுப் பொருள்களை மீண்டும் சுவாசப்பைகளுக்கும், சிறுநீரகங்களுக்கும் காவிச்செல்கின்றது.

அடிப்படையில் உடலில் இரத்தம் செல்லாத பகுதிகளே இல்லை.

எனவே இரத்தத்தில் நோயை ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் பெருகும் போது அவை உடலின் மிகமுக்கியமான உறுப்புக்களான மூளை, இருதயம், ஈரல், சுவாசப்பைகள், சிறுநீரகங்கள் என்பவற்றிற்குப் பரவுகின்றன.

இதனால் ஒரே நேரத்தில் அனைத்து உறுப்புக்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் நோயின் தன்மை மிகக் கடுமையாக வெளிப்படுகின்றது

இவ்வாறு இரத்தத்தில் நோயை ஏற்படுத்தக்கூடிய பக்றீரியாக் கிருமிகள் பெருக்கமடைந்து காணப்படுகின்ற நிலை 'பக்றீரியீமியா' (Bacteremia) என்று மருத்துவரீதியாக அழைக்கப்படுகின்றது

இது சாதாரணமாக பலரில் காணப்படுகின்றது இதனால் நோயோ ஆபத்துக்களோ ஏற்படுவதில்லை.

ஆனால் இந்த நிலைமை மோசமாகி – நோயை ஏற்படுத்துகின்ற கிருமிகள் இரத்தோட்டத்தில் காணப்படுவது மட்டுமன்றி — அவை பன்மடங்கு பெருக்கமடையுமாயின், மிகவும் கடுமையான ஆபத்தான நோயாக இது வெளிப்படும். இதனையே ''செப்றிஸீமியா'' என்கிறோம்.

அதாவது நோயை ஏற்படுத்தும் கிருமிகள் இரத்தத்தில் பன்மடங்கு பெருக்கமடைகின்ற நிலையே செப்றிஸீமியா எனப்படுகிறது.

### ''செப்றிஸீமியா'' ஏற்படுவதற்குரிய காரணங்கள்

உடலின் சகல பகுதிகளுக்கும் இரத்தம் சென்று வருவதனால் உடலின் எந்தவொரு பகுதியிலும் புண்கள், அவிச்சல்கள், சீழ்கள் இருக்குமாயின் அவற்றிலிருந்து கிருமிகள் இரத்தத்தை அடையும்.

உதாரணமாக எமது உடலைச் சுற்றியுள்ள தோலில் (Skin) குறிப்பாக குழந்தைகள், சிறுவர்களின் கால்களில், கைகளில் அவிச்சல்கள், புண்கள், கட்டுகள் (Abscess) இருக்குமாயின் தகுந்த நேரத்தில் ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சை பெற வேண்டும்.

அலட்சியமாக இருப்பின் — அவற்றிலிருந்து கிருமிகள் இரத்தோட்டத்தை அடைந்து பெருகி செப்றிஸீமியா ஏற்படுகின்றது.

இதேபோன்று எமது சிறுநீரகத் தொகுதியில், சிறுநீரகத்தில் சிறுநீர்க்குழாய்கள் சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீரில் கிருமிகளும் நோய்களும் இருக்கும் போது அவற்றுக்குரிய சிகிச்சையை உடனடியாக பெறுதல் வேண்டும். பெறாவிட்டால் அதிலிருந்து கிருமிகள் இரத்தத்தை அடைந்து பெருகி 'செப்றிஸீமியா'? ஏற்படுகின்றது.

எமது சுவாசத் தொகுதியான மூச்சுக்குழாயிலும் சுவாசப்பைகளிலும், இருமல், சளி, நியூமோனியாக் காய்ச்சல் குறிப்பாக குழந்தைகளிலும் சிறு பிள்ளைகளிலும் இருக்கும்போது அவற்றிற்கு ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சை பெறத் தவறின் 'செப்றிஸீமியா' ஏற்படும்.

உணவுக் கால்வாய் என்பவற்றிலும் ஏதாவது நோய்கள், புண்கள் இருப்பின் அவற்றிற்கு சிகிச்சை பெறத் தவறின் 'செப்றிஸீமியா' ஏற்படும்.

வைத்தியசாலையில் இருக்கும் நோயாளர்கள் சலம் போவதற்காக நீண்ட காலம் டியூப் (Urinary Catheter) போட்டிருத்தல், ஊசி போடுதல் (Intravenous Catheter) பெரிய புண்கள் இருத்தல், எரிகாயங்களுக்கு உட்பட்டிருத்தல் போன்றவற்றிலிருந்தும் கிருமிகள் இரத்தோட்டத்தை அடைந்து பெருக்கமடைந்து செப்றிஸீமியா ஏற்படும்.

### செப்றிஸீமியாவை தடுப்பதற்கு சில ஆலோசனைகள்

''செப்றிஸீமியா'' குழந்தைகளிலும் சிறுவர்களிலும் வயோதிபர்களிலும் தான் அதிகளவில் ஏற்படும் என்றாலும் இதற்கு எவரும் விதிவிலக்கல்ல.

கைகளில், கால்களில் அவிச்சல்கள், புண்கள், சீழ்கள் இருக்குமானால் —

இருமலும், சளியும் நீண்ட நாள் இருக்குமானால் —

வயிற்றில் வயிற்றோட்டம் ஏற்படுதல், மலசல வாசல்களில் புண்கள், கட்டுகள் இருக்குமானால் —

ஆரம்பத்திலேயே வைத்தியரிடம் காட்டி சரியான சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இல்லாவிடில் இவற்றிலிருந்து கிருமிகள் இரத்தத்தை அடைந்து பெருகி 'செப்றிஸீமியா' ஏற்படும்.

குறைந்த மருத்துவ ஆய்வுகூட, மருத்துவ வசதிகளுடன் இயங்கும் கிராமப்புற வைத்தியர்கள் அவிச்சல்கள், புண்கள், கட்டுகள், இருமல், சளி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு சாதாரண மருந்துகளுக்குக் குணமடையாதவர்களை — குறிப்பாகச் சிறுவர்களை காலம் தாமதிக்காது யாழ்ப்போதனா வைத்தியசாலைக்கு அல்லது மருத்துவ நிபுணர்களிடம் அனுப்பி வைக்க வேண்டும்.

பெற்றோர்களும், நோயாளிகளும் இந்த விடயத்தில் வைத்திய நிபுணர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்

இன்று நிலவும் மருந்துத் தட்டுப்பாடு, வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை, போக்குவரத்துப் பிரச்சினை போன்றவையே செப்றிஸீமியா பெருகுவதற்கும் பலர் இறப்பதற்கும் காரணமாகும்.

எனவே நோயாளிகளும் பெற்றோர்களும் கிராமப் புறங்களைப் பொறுத்த வரை வைத்தியர்களும் ஒத்துழைத்தால் செப்றிஸீமியா நோயினால் ஏற்படும் உயிர் இழப்புக்களைத் தவிர்க்கலாம். (இ)

**வைத்தியகலாநிதி மாறன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: C. மகேசன் 286, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில், யாழ்ப்பாணம். (29216)

கடையில் பொருத்தப்பட்ட 700 சதுர அடி கொண்ட நல்ல நிலையில் உள்ள சப்பு பலகையிலான பிறாக்கி. தொடர்பு: தேவராசா, 5, மயிலணி வீதி, சுன்னாகம், கே. கே. எஸ். வீதியில் இருந்து இடதுபக்கமாக 1ஆவது இல்லம். (6790)

## காடியன்

லங்கா காடியன் நவம்பர் 1 ஜனவரி 15 வரையான இதழ்களும், உலக உலா, இந்தியா ருடே உட்பட எல்லா சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. யாழ். புத்தக நிலையம், புதிய பஸ் நிலையம் அருகில், அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6936)

## தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்க: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (29227)

## ஒலிபெருக்கி தேவை

ஆலய பாவிப்புக்கான ஒலிபெருக்கி செற் தேவைப்படுகிறது விற்க விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 16, இராணி வீதி, நல்லூர். (கல்வித் திணைக்களத்திற்கு அருகில்) (6935)

## தவறிவிட்டது

31 - 01 - 1994 அன்று மூளாய் வீதிக்கும் வழுக்கையாற்றுக்கும் இடையில் ஒரு பவுண் நிறையுள்ள கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி பராசக்தி ஞானேஸ்வரன், நாகபுரி, வட்டுக்கோட்டை. (29212)

## இலவச திருமண சேவை

36 வயதுடைய, பூராடம், செவ்வாய் 8 மணமகளுக்கும், 33 வயதுடைய செவ்வாய் அற்ற மணமகனுக்கும் மாற்றுச் சம்பந்தமோ தனித்தனியாகவோ மணமக்கள் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை. விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (29198)

## SPECIAL ENGLISH

ஆங்கில ஆசிரியர் தோவுக்கான போட்டிப் பரீட்சை, G A. Q (1st in Com ) Spoken English, N C E. (Part I. II) ஆகியவற்றிற்கான விசேட ஆங்கில வகுப்புக்களின் புதிய பிரிவுகள் (5-2-94) சனிக்கிழமை ஆரம்பமாகின்றன இ சிவலிங்கம், புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம் (6939)

---

# ENGLISH TEACHRS' SELECTION EXAMINATION-1994

உதவி ஆங்கில ஆசிரியர்

தெரிவுப் பரீட்சை

## துரித பயிற்சி நெறி

ஆரம்பம்

**04-02-94 வெள்ளி பி.ப 2 மணி**

ஆசிரியர்

**த. ந. பஞ்சாட்சரம்**

மேலதிக விவரங்கட்கு தொடர்பு கொள்ளவும்

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

(C/7168)

---

# நன்றி நவிலல்

30-01-94 இல் நடைபெற்ற எமது மணிவிழாவினை ஒழுங்கு செய்து சிறப்புற நடத்திய யாழ் கனகரத்தினம் ம. ம. வி. பழைய மாணவர் சங்கம், பா. ஆ. ச. ஆசிரியர்கள், மாணவர்கள், மலர் வெளியிட்ட மன்றத்தினர், T. V. எடுத்த அன்பர்கள், இல்லங்கள் தோறும் பூரண கும்பம் வைத்து வரவேற்ற அன்பர்கள், மங்கள இசை வழங்கிய கலைஞர்கள், ஆசியுரை, நயப்புரை வழங்கிய பெரியோர், பொருளுதவி புரிந்த அன்பர்கள், பொன்னாடை போர்த்தி மாலையிட்டு பரிசில்கள், வாழ்த்து மடல்கள் வழங்கி கௌரவித்தோர், வருகை தந்து சிறப்பித்தோர் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றி.

திரு. மு. இராமலிங்கம்

திருமதி சொர்ணகுமாரி இராமலிங்கம்

50, புறூடி லேன்,

யாழ்ப்பாணம்

(29229)

---

# ஓவியம், சிற்பம், சித்திரம்
# பயிற்சி வகுப்புகள்

புதிய பிரிவுகள் (வெள்ளி) **04-02-94** மாலை 3மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ பயிற்சிகள் தொடர்பான விவரங்களை நிலையத்தில் பெறலாம்.

**கலையகம்,**

ஓவியக் கல்வி நிலையம்,

பென்தகெ ஸ்தே வீதி,

கச்சேரியடி யாழ்ப்பாணம்.

[29230]

---

NCL

15, VELLANTHERU - JAFFNA.

# O/L REVISION CLASS

பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு துரித 6 மாத மீட்டல் பயிற்சி N. C. C. L. நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது. விரும்பியவர்கள் மேற்படி விலாசத்தில் 9a m — 4p m. பதிவு செய்யவும்

# A/L கடந்தகால வினாத்தாள் 3 மாத துரிதப் பயிற்சி

புதிய மாணவருக்கும் ஏனையோருக்கும் ஏற்றது மேற்கூறிய இடத்தில் (9a.m. — 4p m.) பதிவு செய்யவும்

[29231]

---

ஓம்

விராட் விஸ்வப்பிரம்மனே நம:

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் தைமாதம் 23 ஆம் நாள் (05-02 1994) சனிக்கிழமை காலை 7-10மணி முதல் 8 43மணி வரை வரும் கும்ப லச்கின ★ சுபமுகூர்த்த வேளையில் ★

எமது திருநிறை செல்வன்

**சுப்பையா பேரின்பராசா**

(பேரின்பம்)

அவர்களுக்கும்

எமது திருநிறை செல்வி

**இராசதுரை தேவராணி**

(தேவி)

அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு நல்லூர் சிவன்கோவிலில் நிகழவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்று மாலை **4 30** மணியளவில் மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

★ இருவீட்டார் அழைப்பு ★

தங்கள் நல்வரவை நாடும்:

திரு நா மகாநேசன்
குடும்பத்தினர்,
366, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.

திருமதி
இராசதுரை மங்கையர்க்கரசி,
''சொர்ண வடலி'',
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

[தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை]

[29220]

---

வல்லைவெளி

# 'சுதர்ஸனம்'
## மரம் வளர்ப்புத் திட்ட நிர்மாணிகள்

நடத்தும்......

மகோம்

## நாவன்மைப் போட்டி - 1994

(பேச்சுப்போட்டி)

★ 23 வயதிற்குட்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம்.

★ போட்டிக்குரிய தலைப்புகள் போட்டியின்போதே போட்டியாளரிடம் வழங்கப்படும்.

★ சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்துக்களே முன்வைக்கப்படும்.

★ விண்ணப்ப முடிவுதினம்;- 11 - 02 - 1994

★ வெற்றியீட்டுவோருக்கு

## அமரர் இலக்குமி (இராணி)

ஞாபகார்த்த விருதுகள் வழங்கப்படும்.

ஒப்பம்:

மா. கனகராசா

திட்ட நிர்மாணி

முகவரி:-

சுதர்ஸனம்,
நெல்லியடி,
கரவெட்டி.

[சி/7169]

---

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

மானிப்பாய்

# நாய்களை வளர்ப்போருக்கான
# முக்கிய அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாகப் பிரதேச எல்லைக்குள் நாய்களை வளர்ப்போர் உடனடியாக நாய்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 5/-வீதம் பதிவுக் கட்டணமாக எமது உப அலுவலகங்களில் செலுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதுடன் சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொண்டு தமது நாய்களுக்குத் தவறாது விசர்நோய்த் தடுப்பூசி போடுவித்துக் கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். சகலரும் தங்கள் நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டும் என்பதையும், எச்சந்தர்ப்பத்திலும் வீதிக்கு வரவிடக் கூடாதென்பதையும், தெரிவித்துக் கொள்வதுடன், வீதிகளில், ஒழுங்கைகளில், பொது இடங்களில் காணப்படும் நாய்களைக் கட்டாக்காலி நாய்களாகக் கருதி, அவற்றைப் பிடித்து அழிப்பதற்கு இச்சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அனைவரினதும் கவனத்திற்கு இத்தால் கொண்டு வர விரும்புகின்றேன்.

கா சந்திரராசா,

விசேட ஆணையாளர்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்.
1994 02 01

(சி/7217)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
# வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு: 21 - 09 - 1926



உதிர்வு: 04 - 01 - 1994

## அமரர் சின்னத்தம்பி இராசதுரை

(இராசா)

(சுன்னாகம் செல்வலெட்சுமி ஸ்ரோர் முன்னாள் உரிமையாளர்)

கூடு விட்டுப் போனதெங்கே குலவிளக்கே
வீடிருண்டு போனதிங்கே குணவிளக்கே
தேடுதெங்கள் பாவ நெஞ்சம் ஒளிவிளக்கே
ஓடிவந்து நீடு நின்று ஒளிர் விளக்கே

மாண்பூத்த மங்கை நல்லாள் முன்னே செல்ல
நாண்கோர்த்த நாயகன் நீ பின்னே சென்றாய்
தூண்நேர்த்த மக்களாய் புலம்புகின்றோம்
வான்பேர்த்து வந்தொருக்கால் புன்னகைக்காயோ.

இன்று (03 - 02 - 1994) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்து, அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உடன்பிறப்புகள்

162, நாவலர் வீதி,
(பாலாகொட்),
[illegible]

[29232]

---

# மன்னாரில் மக்களின் வீடுகளில் படையினர்!

கொழும்பு, பெப் 3

போசாலை, வங்காலை, பள்ளிமுனை, மற்றும் தலைமன்னார் துறை (மேற்கு) ஆகிய பகுதிகளில் மக்களுக்குச் சொந்தமான வீடுகளில் பொலிஸார் மற்றும் படையினர் இருக்கின்றனர் என்றும்—

அதனால் இப்பகுதிகளில் மீள்குடியிருப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும்—

மன்னார் மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்தனர்.

படையினர் முக்கிய பணியில் ஈடுபட்டுள்ளதால் வீடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

# மாருதியின்
## இன்றைய புதிய வெளியீடுகள்

K குஞ்சுமோன் வழங்கும்

**சிந்து நதிப் பூ**
✲ ரஞ்சித், கவிதா, வடிவேலு

**மம்மி டடி**
✲ அரவிந்தசாமி, கௌதமி

**வாங்க பார்ட்னர் வாங்க**
✲ விசு, ராதா ரவி, வினோதினி, விவேக்

**வீட்டில் விஷேசங்க**
✲ பாக்கியராஜ், பிரகதி

✲ கவுண்டமணி செந்தில்

**நகைச் சுவை**
(புதிய நகைச்சுவை வெளியீடு)

**சேதுபதி IPS**
✲ விஜயகாந், மீனா

முன்பு வெளியிடப்பட்ட
✲ கறுப்பு வெள்ளை

**சபாஸ் பாபு**

**உழைப்பாளி**

ஒரிஜினல் பிரதிகள் வெளி வந்துள்ளன

சகல புதிய வெளியீடுகளுக்குமுரிய போஸ்டர்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

## மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

(29241)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

ஒப்பந்த அடிப்படையில் முழுநேர உபவிடுதித் தலைவர் பதவிக்கான (பெண்) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994-03-04 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:
5,400/- ரூபா மாதமொன்றிற்கு (நிலையானது)

தகைமைகள்:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி, விடுதிகளை நிர்வகிப்பதிலும் முகாமை செய்வதிலும், அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

வயது:
நாற்பது ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.

பரீட்சை ஒன்றின் மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும் தெரிவு நடைபெறும்.

வெற்றி பெறும் விண்ணப்பதாரி நியமிக்கப்படும், கிளிநொச்சியில் / மருதனாமடத்தில் / யாழ்ப்பாணத்தில் உள்ள வதிவு மண்டபத்தில் வசித்தல் வேண்டும். ஆனால் அவரின் குடும்பத்துடன் வதிவு மண்டபத்தில் வசிக்க முடியாது. வெற்றிபெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும் பிணை வைப்பாக ரூபா 5,000/- செலுத்துதல் வேண்டும். இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் 10 தவணைகளில் கழிக்கப்படல் வேண்டும்.

இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 டிசம்பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993மே 12ஆம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக் கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபால் கட்டளை உடன் 23 10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விவரங்கள் தெளிவில்லாமல் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994 - 02 - 29

[சி-7166]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org